
**ஜூன் – 16**

# TNPSC துளிகள்

- ஜெனீவா நகரில் உள்ள உள்நாட்டுப் புலம்பெயர்வு கண்காணிப்பு மையத்தின் (IDMC) அறிக்கையின்படி வெள்ளம், புயல்கள் மற்றும் பிற பேரிடர்கள் காரணமாக 2024 ஆம் ஆண்டில், இந்தியாவில் கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவில் அதிகபட்சமாக 5.4 மில்லியன் புலம் பெயர்வுகள் பதிவாகியுள்ளது.
- டெல்லி அரசாங்கமானது வடமேற்கு டெல்லியில் உள்ள ஹோலம்பி கலன் என்னும் ஒரு இடத்தில் இந்தியாவின் முதலாவது ஒருங்கிணைந்த மின்னணுக் கழிவுச் சுத்திகரிப்புப் பூங்காவை உருவாக்கும் திட்டங்களை அறிவித்துள்ளது.
- மத்திய அமெரிக்காவின் கௌத்திமாலாவில் உள்ள அதிகளவில் செயல்பாட்டில் உள்ள 'வோல்கன் டி ஃபியூகோ' எரிமலை சமீபத்தில் வெடித்தது.
- 2026 ஆம் ஆண்டினைச் சர்வதேச மகளிர் விவசாயி ஆண்டாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அறிவித்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## DRUM செயலி




Airborne particulate matter can cut the life expectancy of Indians by up to five years. K. BHAGYA PRAKASH

- கரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகக் குழுவானது, நகர்ப்புறப் பசுமை சார் போக்குவரத்திற்கான மாற்றுப் பாதைத் திட்டமிடல் (அல்லது DRUM) என்ற வலை தளத்தினை உருவாக்கியுள்ளது.
- கூகுள் வரைபடத்தைப் போன்ற இந்த ஒரு செயலியானது காற்றின் தரநிலை மற்றும் ஆற்றல் திறன் அடிப்படையில் பயனர்கள் அவர்களது பாதைகளைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கும் கூடுதல் அம்சத்துடன் செயல்படும்.
- DRUM செயலியானது, பயனர்களுக்கு மிக குறுகிய, வேகமான, குறைந்த அளவு காற்று மாசுபாடு வெளிப்பாடு கொண்ட பாதை (LEAP), குறைந்த ஆற்றல் நுகர்வுப் பாதை (LECR), மற்றும் நான்கு காரணிகளின் கலவையைக் கொண்ட பரிந்துரைக்கப்பட்ட பாதை என ஐந்து விதமான பாதை விருப்பத் தேர்வுகளை வழங்குகிறது.

- LEAP பாதையானது மத்திய டெல்லியில் பயண நேரத்தை 40% அதிகரித்த போதிலும், பயணத்தின் போதான மாசு வெளிப்பாட்டை 50 சதவீதத்திற்கும் மேலாகக் குறைத்தது.

## இந்தியாவின் மக்கள் தொகை மற்றும் கருவுறுதல் விகிதம்



Source: UNFPA data for 2025

- '2025 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை குறித்த நிலை' (SOWP) என்ற அறிக்கையை ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் (UNFPA)வெளியிட்டுள்ளது.
- இந்தியா தற்போது சுமார் 1.46 பில்லியன் மக்கள் தொகையுடன் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக உள்ளது.
- இந்த ஒரு எண்ணிக்கையானது தற்போதிலிருந்து சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு குறையத் தொடங்குவதற்கு முன்னதாக, சுமார் 1.7 பில்லியனாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- பிறப்பு விகிதம் குறைந்து வந்தாலும், இந்தியாவின் இளையோரின் மக்கள் தொகை குறிப்பிடத் தக்க அளவில், 0 முதல் 14 வயதுப் பிரிவில் 24% ஆகவும், 10 முதல் 19 வயதுப் பிரிவில் 17% ஆகவும், மற்றும் 10 முதல் 24 வயதுப் பிரிவில் 26% ஆகவும் உள்ளது.
- நாட்டின் மக்கள்தொகையில் 68% பேர் உழைக்கும் வயதிலானவர்களாக உள்ளனர் (15 முதல் 64 வயது).
- இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதமானது ஒரு பெண்ணுக்கு 1.9 பிறப்புகளாகக் குறைந்துள்ளது என்பதோடு இது 2.1 என்ற மாற்றீடு நிலைக்குக் கீழே குறைந்துள்ளது.
- அதாவது, மிகச் சராசரியாக, இந்தியப் பெண்கள் புலம்பெயர்வினை சேர்க்காமல், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அதே அளவில் மக்கள்தொகையினைப் பேணுவதற்குத் தேவையானதை விட குறைவான குழந்தைகளைப் பெற்றுள்ளனர்.
- 1960 ஆம் ஆண்டில், இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 436 மில்லியனாக இருந்த போது, ஒரு சராசரி பெண்ணுக்கு சுமார் ஆறு குழந்தைப் பிறப்புகள் பதிவாகின.

## அம்லேஷ் குமார் மற்றும் பீகார் மாநில அரசு இடையிலான வழக்கு

- உச்ச நீதிமன்றமானது ஒரு குற்றம் சாட்டப்பட்டவரை போதைப் பொருள் பகுப்பாய்வு வகை சோதனைக்கு என்று அவரை உட்படுத்துவதற்கு அவருக்கு எவ்விதமான மறுக்க முடியாத உரிமையும் இல்லை என்று கூறியுள்ளது.
- ஆனால் நீதிமன்றம் ஆனது, "குற்றம் சாட்டப்பட்டவர் பொருத்தமானச் சூழலில் தானாக முன் வந்து அப்போதைப் பொருள் பகுப்பாய்வு சோதனைக்கு உட்பட உரிமை உண்டு" என்று கூறியது.
- காணாமல் போன பெண் சம்பந்தப்பட்ட வரதட்சணை கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப் பட்ட அனைத்து குற்றவாளிகளுக்கும், போதைப் பொருள் பகுப்பாய்வு வகை


சோதனைகளை நடத்த வேண்டி காவல்துறைக்கு ஒரு அனுமதியினை அளித்த பாட்னா உயர்நீதிமன்றத்தின் உத்தரவை இந்தத் தீர்ப்பு ரத்து செய்தது.

- 2010 ஆம் ஆண்டில், செல்வி மற்றும் கர்நாடகா மாநில அரசு இடையிலான வழக்கில் உச்ச நீதிமன்றம் போதைப்பொருள் பகுப்பாய்வுச் சோதனை போன்ற நுட்பங்களுக்கு ஒரு நபரை வலுக்கட்டாயமாக உட்படுத்துவது, அரசியலமைப்பின் 20(3) மற்றும் 21 ஆகிய சரத்துகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்டச் சுதந்திரத்தை மீறுவதாகக் கூறியுள்ளது.
- போதைப் பொருள் பகுப்பாய்வு என்பது சில மயக்க மருந்துகள் (பார்பிட்யூரேட்டுகள்) அல்லது மிகப் பெரும்பாலும் சோடியம் பென்டோத்தல் போன்ற பிற இரசாயனங்களை உபயோகிக்கும் முறையாகும்.
- நீதிமன்றத்தால் நேரடியாக ஒரு தன்னார்வ அடிப்படையிலான போதைப் பொருள் பகுப்பாய்வு அறிக்கைகளை ஆதாரமாக ஏற்றுக் கொள்ள முடியாது.




## பொருளாதாரச் செய்திகள்

### 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் அந்நிய நேரடி முதலீட்டு வரவுகள்





- 2024-25 ஆம் ஆண்டில், இந்தியா கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிக

அதிகமாக 81 பில்லியன் டாலர் என்ற மொத்த அந்நிய நேரடி முதலீட்டினைப் பெற்றது.

- 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டு மொத்தமான அந்நிய நேரடி முதலீட்டில் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகியவை ஒரு சேர 51% பங்கினைக் கொண்டு இருந்தன.
- குஜராத்தின் பங்கு சுமார் 6 சதவீதத்திலிருந்து 11% என்பதாக உயர்ந்த அதே நேரத்தில் தமிழ்நாட்டின் பங்கு 11 சதவீதத்திலிருந்து 7% ஆகக் குறைந்துள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டில் 89 ஆக இருந்த அந்நிய நேரடி முதலீட்டிற்கான மூல நாடுகளின் எண்ணிக்கையானது 2024-25 ஆம் ஆண்டில் 112 ஆக அதிகரித்தது.
- இது வரை பெறப்பட்ட அதிகபட்ச அந்நிய நேரடி முதலீட்டு வரவு ஆனது, 2021-22 ஆம் ஆண்டில் 84.83 பில்லியன் டாலராகும்.
- சிங்கப்பூர் 14.94 பில்லியன் டாலர் வரவுடன் மிகப்பெரிய அந்நிய நேரடி முதலீட்டு மூல நாடாக உருவெடுத்துள்ளது.
- அதைத் தொடர்ந்து மொரிஷியஸ் (8.34 பில்லியன் டாலருக்குப் பதிலாக 3.73 பில்லியன் டாலர்), அமெரிக்கா (சுமார் 5.45 பில்லியன் டாலர்), நெதர்லாந்து (4.62 பில்லியன் டாலர்), ஐக்கிய அரபு அமீரகம் (சுமார் 3.12 பில்லியன் டாலர்), ஜப்பான் (2.47 பில்லியன் டாலர்), சைப்ரஸ் (1.2 பில்லியன் டாலர்), ஐக்கியப் பேரரசு (795 மில்லியன் டாலர்), ஜெர்மனி (469 மில்லியன் டாலர்) மற்றும் கேமன் தீவுகள் (371 மில்லியன் டாலர்) ஆகிய பல நாடுகள் உள்ளன.
- துறை வாரியான அந்நிய நேரடி முதலீட்டைப் பொறுத்தவரைய, சேவைகள், வர்த்தகம், தொலைத்தொடர்பு, வாகன உற்பத்தித் துறைகள், கட்டுமான உருவாக்கம், மரபுசாரா எரிசக்தித் துறை மற்றும் இரசாயனங்கள் சார்ந்தத் தொழிற்துறைகள் ஆகியவற்றில் முதலீடுகள் அதிகரித்துள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள் 2025




- ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறையானது (UNCTAD) மற்றும் பிற துறைகளுடன் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டில் 2.4% ஆகவும் (2024 ஆம் ஆண்டில் இருந்த 2.9% என்ற அளவிலிருந்து), 2026 ஆம் ஆண்டில் 2.5% ஆகவும் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் சுமார் 7.1% ஆக இருந்த இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டில் 6.3% ஆகக் குறைந்துள்ளது.
- ஆனால் இந்தியா இன்றும் முக்கிய உலகப் பொருளாதாரங்களில் மிகவும் ஒரு உயர்ந்த நிலையிலேயே உள்ளது.
- இது 2026 ஆம் ஆண்டில் 6.4 சதவீதத்தினை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- அமெரிக்க நாட்டின் வளர்ச்சி ஆனது வரிகள் மற்றும் கொள்கைகளின் நிச்சயமற்றத் தன்மை காரணமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் சீனாவின் வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 4.6% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- காசா, ஹைத்தி, மாலி, தெற்கு சூடான் மற்றும் சூடான் போன்ற பல்வேறு போர்ச் சூழல் மண்டலங்களில் சுமார் 1.9 மில்லியன் பேர் பஞ்சத்தை எதிர்கொள்ளும் ஒரு நிலையில் உள்ளதுடன், உலகளவில் சுமார் 343 மில்லியன் மக்கள் மிகக் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்.
- வீட்டுச் செலவினங்களில் உணவிற்குப் பெரும் பங்கைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகள் உணவுப் பணவீக்கத்தால் மோசமாகப் பாதிக்கப் படுகின்றன.

## உலக ஆற்றல் முதலீட்டு அறிக்கை 2025




- இது சர்வதேச எரிசக்தி முகமையால் (IEA) வெளியிட்ட புதிய அறிக்கையாகும்.
- 2025 ஆம் ஆண்டில் உலகளாவியத் தூய்மையான எரிசக்தி முதலீடுகள் 2.2 டிரில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிசக்தி முதலீட்டில் சீனாவானது 25 சதவீதத்திற்கும் அதிகமான பங்கினைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2015 ஆம் ஆண்டு முதல் 625 பில்லியன் டாலருக்கும் அதிகமாக அதன் தூய்மையான எரிசக்தி முதலீடுகளை இரட்டிப்பாக்கியுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில், சீனாவானது சுமார் 100 GW திறன் கொண்ட புதிதான நிலக்கரி எரிசக்தி ஆலைகளை நிறுவுவதற்கு அங்கீகரித்துள்ளது என்பதோடு இது உலகளவில் 2015 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட நிலக்கரி எரிசக்தி சார்ந்த ஆலைகளுக்கான அதிக ஒப்புதல் ஆகும்.
- இந்தியாவானது 2015 ஆம் ஆண்டில் சுமார் 13 பில்லியன் டாலராக இருந்த தனது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முதலீடுகளை 2025 ஆம் ஆண்டில் 37 பில்லியன் டாலராகக் கணிசமாக அதிகரித்துள்ளது.
- அதே தசாப்தத்தில், அதன் புதைபடிவ எரிபொருள் முதலீடுகளும் சுமார் 41 பில்லியன் டாலரில் இருந்து 49 பில்லியன் டாலராக உயர்ந்தன.
- 2015 ஆம் ஆண்டில், அணுசக்தி மற்றும் இன்ன பிற தூய்மையான எரிசக்தி ஆதாரங்கள் மீதான நாட்டின் செலவினம் 1 பில்லியன் டாலராக இருந்தது என்பதோடு இது 2025 ஆம் ஆண்டில் 6 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய இணைய ஆளுகை விருதுகள் 2025




- 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய இணைய ஆளுகை விருதுகளுக்காக 6 பிரிவுகளில் 19 திட்டங்கள்/முன்னெடுப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய இணைய ஆளுகை விருதுகளில், மகாராஷ்டிராவின் துலே மாவட்டத்தில் உள்ள ரோகிணி கிராமப் பஞ்சாயத்து, அதன் மகத்தான எண்ணிம முன்னெடுப்பிற்காகத் தங்கப் பதக்கத்தினை வென்றது.
- திரிபுரா மாநிலத்தின் மேற்கு திரிபுரா மாவட்டத்தில் உள்ள மேற்கு மஜ்லிஷ்பூர் என்ற கிராமப் பஞ்சாயத்து வெள்ளிப் பதக்கத்தினை வென்றது.
- ஒடிசாவின் கியோஞ்சர் மாவட்டத்தில் அமைந்துள்ள சுகாதி கிராமப் பஞ்சாயத்திற்கு ஜூரி (தேர்வு மன்ற) விருது வழங்கப்பட்டுள்ளது.
- குஜராத்தின சூரத் மாவட்டத்தில் உள்ள பால்சானா கிராமப் பஞ்சாயத்து மற்றொரு ஜூரி விருதினை வென்றது.


# முக்கிய தினங்கள்

## பிர்சா முண்டாவின் 125வது நினைவு தினம் - ஜூன் 09

- பழங்குடியினத் தலைவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான பகவான் பிர்சா முண்டா

அவர்களின் 125வது நினைவு தினம் ஆனது சமீபத்தில் அனுசரிக்கப்பட்டது என்பதோடு இது 'பாலிதான் திவாஸ்' என்றும் அழைக்கப்படுகிறது.

- அவர் 1875 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று, தற்போதைய ஜார்க்கண்டில் உள்ள உலிஹாட்டு கிராமத்தில் பிறந்தார்.
- அவரது பிறந்த நாள் ஆனது ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ் (பழங்குடியினர் பெருமை தினம்) என்று அனுசரிக்கப்படுகிறது.
- 1800 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் "பெருங்கலகம்" அல்லது பெரும் கிளர்ச்சி என்று பொருள் படும் உல்குலனை வழி நடத்தியதற்காக பிர்சா முண்டா மிகவும் பிரபலமாக அறியப்பட்டவர்.
- அவர் பழங்குடியினச் சமூகங்களால் 'தார்த்தி ஆபா' அல்லது 'பூமியின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.
- 1900 ஆம் ஆண்டு ஜூன் 09 ஆம் தேதியன்று ராஞ்சி சிறையில் அவர் உயிரிழந்த போது அவரது வயது 25 ஆகும்.





# இதரச் செய்திகள்

## சீர்காழி தமிழிசை மூவர்

- புதுச்சேரி கலைஞர் R. இராஜராஜன் சீர்காழி தமிழிசை மூவரின் திருவுருவப் படத்தை மீண்டும் உருவாக்கியுள்ளார்.
- முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை மற்றும் அருணாச்சலக் கவிராயர் ஆகிய தமிழிசை மூவர் (தமிழ் மூவர்) தமிழில் பாரம்பரியக் கீர்த்தனைகளை இயற்றியவர்கள் மற்றும் கர்நாடக இசையின் பரிணாம வளர்ச்சிக்கு விலை மதிப்பற்றப் பங்களிப்பைச் செய்தவர்கள் ஆவர்.
- முத்துத் தாண்டவரின் வாழ்வியல் காலம் என்பது தோராயமாக 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்.

- அருணாச்சலக் கவிராயர் (1711-1779) மற்றும் மாரிமுத்தாப் பிள்ளை (1712-1787) ஆகிய இருவரும் அவருக்கு அடுத்ததாக இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு வந்தனர்.




## கீழடி அகழ்வாராய்ச்சிக் கண்டுபிடிப்புகளின் நிலை




- இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஆனது, கீழடி அகழ்வாராய்ச்சியின் (2014–2016) முதல் இரண்டு பருவங்களை தலைமையேற்று நடத்திய அரசுத் தொல்பொருள் ஆய்வாளர் K. அமர்நாத் இராமகிருஷ்ணாவை தனது 982 பக்க அறிக்கையைத் திருத்தி அமைக்க அறிவுறுத்தியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதியன்று ASI அமைப்பின் தலைமை இயக்குநரிடம் அவர் அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தார்.
- சிறந்த வகைப்பாடு, காலக் கணிப்புச் சீராக்கம் மற்றும் தெளிவான ஆவணங்களின் தேவையை மேற்கோள் காட்டி, மத்திய அரசு அதன் அறிக்கையைத் திருத்தி மீண்டும் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளது.

## கான்குலுலு மங்கோலியென்சிஸ் - டிராகன் பிரின்ஸ்


- மங்கோலிய நாட்டின் ஒரு அருங்காட்சியகத்தின் சேகரிப்பில் இருந்து ஒரு புதிய வகை டைனோசரை அறிவியலாளர்கள் கண்டறிந்துளனர்.
- அவர்கள் ஆய்வு செய்த சுமார் 86 மில்லியன் ஆண்டுகள் மிகப் பழமையான இரண்டு எலும்புக் கூடுகள், தற்போது அனைத்து வகையான டைரனோசர்களின் நெருங்கிய

மூதாதையரான ஓர் இனத்தைச் சேர்ந்தவை எனக் கண்டறியப் பட்டுள்ளன.

- அவை டி.ரெக்ஸ் எனும் முதன்மையானதொரு டைரனோசர் இனத்தினை உள்ளடக்கிய வேட்டையாடும் குழுவினைச் சார்ந்தது.
- அவர்கள் அந்த ஒரு இனத்திற்கு மங்கோலியாவின் டிராகன் இளவரசன் என்று பொருள் படும் கான்குலுலு (கான் கூ லூ - khan-KOO-loo என்றும் இது உச்சரிக்கப் படுகிறது) மங்கோலியென்சிஸ் என்று பெயரிட்டனர்.
- 'பிரின்ஸ்' என்பது ஓர் ஆரம்பகால, மிகச் சிறிய வகை டைரனோசொராய்டு என்பதைக் குறிக்கிறது.




## ILOSTAT தரவுத்தளம்




- இந்தியாவின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பரவல் ஆனது, 2015 ஆம் ஆண்டில் இருந்த 19 சதவீதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டில் 64.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இப்பயனாளிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடும் போது, தற்போது இந்தியா சுமார் 94

கோடி குடிமக்களுக்குச் சமூகப் பாதுகாப்பு நலன்களை வழங்கி உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

- ILOSTAT தரவுத் தளத்தில் 2025 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பரவல் தரவைப் புதுப்பித்த முதல் நாடும் இந்தியாவாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★